சிறகுகள் பிரசுர வரிசை - 01

# உங்களால் வானத்தை வாங்கவோ விற்கவோ முடியுமா?

செவ்விந்தியத்தலைவர் சீத்தல்,
அமெரிக்க ஜனாதிபதிக்கு 1855 இல் எழுதிய கடிதம்

**வெளியீடு**
**கல்வி வெளியீட்டுப் பிரிவு | சுற்றுச்சூழல் பிரிவு**
**சிறகுகள் அமையம்**

உலக மண் தினத்தினை முன்னிட்டு
2021.12.05 ஆம் திகதி வெளியிடப்படுகின்றது.

**சிறகுகள் பிரசுர வரிசை - 01**
**பதிப்பு :** டிசெம்பர் 2021
**வெளியீடு :** சிறகுகள் அமையம், கல்வி வெளியீட்டுப் பிரிவு
**பக்கங்கள் :** 8
**விலை :** ரூபா 10.00
**நிதி அனுசரணை :** Yarl Salesforce Ohana

சிறகுகள் அமையமானது 2016ஆம் ஆண்டு “கல்விக்கான இலட்சியப் பயணம்” எனும் எண்ணக்கருவுடன் இளையோரால் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது யாழ்ப்பாணம், கிளி - முல்லைத்தீவு, வவுனியா - மன்னார், மலைநாடு, மட்டு - அம்பாறை, திருக்கோணமலை ஆகிய நிர்வாகப் பிராந்தியங் களில் செயற்படுகின்றது. மாணவர்களின் வாசிப்பு விருத்தி, நூலகங்களை உருவாக்குதல், எண்ணிமக் கல்வி விருத்தி, இளையோர் வலுவூட்டல் எனும் தொனிப் பொருட்களில் இணைந்து பயணித்தல் எனும் கோட்பாட்டில் செயற்பட்டு வருகின்றது. பாடசாலை மாணவர்களிடையே சுற்றுச்சூழல்சார் கருத்துரு வாக்கங்களை ஏற்படுத்தும் வகையில் இப்பிரசுரமானது சிறகுகள் சுற்றுச்சூழல் பிரிவின் ஏற்பாட்டில் கல்வி வெளியீட்டுப் பிரிவினால் முதலாவது பிரசுரமாக வெளியிடப்படுகின்றது.

PUBLIC DOMAIN
*You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.*

# உங்களால் வானத்தை வாங்கவோ விற்கவோ முடியுமா?

*வெள்ளையர்கள் 16,17 ஆம் நூற்றாண்டுகளில் தான் அமெரிக்க நாடுகளில் குடியேற ஆரம்பித்தனர். அதற்கு முன்னர் தென், வட அமெரிக்கக் கண்டங்கள் முழுவதிலும் செவ்விந்திய இன மக்களே வாழ்ந்து வந்தனர். 1800 முதல் 1900 ஆம் ஆண்டிற்குள் அமெரிக்கா முழுவதும் இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாட்டினரால் ஆக்கிரமிக்கப்பட்டது. இங்கே வாழ்ந்த செவ்விந்தியர்கள் சில குறிப்பிட்ட பிரதேசங்களில் பட்டிகள் போன்ற அமைப்புக்களில் ஆடு மாடுகள் போல் அடைத்து வைக்கப்பட்டனர். 1860களிலிருந்து தான் வடஅமெரிக்காவில் வாழும் செவ்விந்தியர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடி வருகின்றார்கள்.*

*1855 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த ஃப்ராங்க்லின் பியர்ஸ் வாஷிங்டன் மாநிலத்தில் வாழ்ந்து வந்த சுவாமிஷ் இயக்கத்தின் செவ்விந்தியத் தலைவராக இருந்த சீத்தல் என்பவருக்குச் செவ்விந்தியரின் நிலம் அனைத்தையும் தாம் வாங்க விரும்புவதாக ஒரு கடிதம் எழுதி அனுப்பினார். கடிதம் பெயரளவில் தான்: துப்பாக்கி முனையில் ஆக்கிரமிக்கப்போகிறோம் என்பது தான் அதன் பொருள்.*

*அமெரிக்க ஜனாதிபதியின் அக்கடிதத்துக்கு செவ்விந்தியத் தலைவர் சீத்தல் அனுப்பிய பதில் கடிதம் சூழல் சீரழிவது பற்றிய அறிக்கையாக மாத்திரமல்ல வரலாற்றுச்சிறப்புமிக்க ஆவணமாக இன்று வரை போற்றப்படுகிறது. 166 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் எழுதிய விடயங்கள் இன்றும் எமக்குப் பொருத்தமானவையே. பூமித்தாயை மெய்யாகவே நேசித்த அந்தப் புத்திரனின் கடிதம் இங்கே முழுமையாகத் தரப்படுகின்றது.*

## அமெரிக்க அதிபருக்கு செவ்விந்தியத் தலைவரின் கடிதம்

அமெரிக்காவின் பெருந்தலைவர் எங்களது நிலத்தினை வாங்க விரும்புவதாக அறிகிறோம். அமெரிக்கத் தலைவர் தனது நட்பையும் நல்லெண்ணத்தையும் எங்கள்பால் காட்டுவதாகவும் அறிகிறோம். இது அவரது அன்பையே காட்டுகிறது. ஏனெனில் எங்களது நட்பு அவருக்குத் தேவையற்றது. ஆனாலும் உங்களது வேண்டுகோளை நாங்கள் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். அப்படி நாங்கள் ஏற்றுக்கொள்ளாவிடில் துப்பாக்கி சகிதம் வெள்ளை-யர் இங்கு வந்து எங்களது நிலத்தை அபகரித்துக் கொள்வார்கள் என்பது எங்களுக்கு நன்றாகவே தெரியும். இந்தச் செவ்விந்தியத் தலைவன் அமெரிக்கப்பெருந்தலைவரிடம் சொல்லப்போவது, பருவங்கள் உள்ளவரை வானில் நட்சத்திரங்கள் உள்ளது போல் முக்காலமும் உண்மையாகும்.

### உங்களால் வானத்தை வாங்கவோ விற்கவோ முடியுமா?

நிலத்தின் கதகதப்பை வாங்க முடியுமா? நீங்கள் கேட்பது எங்களுக்கு வேடிக்கையாகத்தான் இருக்கிறது. இந்தத் தென்றல் காற்றின் வாசமும், இந்தத் தெளிந்த நீரின் ஒளியும் எங்களுக்குச் சொந்தமானவையல்ல. இவற்றை எப்படி உங்களால் எங்களிட மிருந்து வாங்க முடியும். இது பற்றிக் காலம் தான் சொல்ல வேண்டும். இந்த நிலத்தின் ஒவ்வொரு பகுதியும் எங்களுக்குப் புனிதமானவை. ஒவ்வொரு ஊசி இலையின் பளபளப்பும், கரைகளின் மணலும், அடர்ந்த காடுகளின் பனி மூட்டமும், வண்டுகளின் ரீங்காரமும் எங்களுக்குப் புனிதமானவை. நெஞ்சை விட்டு அகலாதவை.

வெள்ளை மனிதனுக்கு எங்களது வாழ்க்கை நெறி விளங்குவது இல்லை. அவனுக்கு நிலத்தின் ஒரு பகுதிக்கும் மற் றொரு பகுதிக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் தெரிவதில்லை. அவன் இரவில் வரும் திருடனைப் போல் தனக்கு வேண்டியதை

எல்லாம் நிலத்திலிருந்து எடுத்துக் கொள்கிறான். இந்த நிலம் அவனது சகோதரன் அல்ல ; எதிரி. அதை அவன் வெற்றி கொண்டு முன்னேறுகிறான். தனது முன்னோர்களின் கல்லறைகளை அவன் வழிநெடுகிலும் அமைத்துக்கொண்டு செல்கிறான். அதைப்பற்றி அவன் கவலைப்படுவதில்லை. நிலத்தை தனது குழந்தைகளிடம் இருந்தே அவன் அபகரித்துச் செல்கிறான். அவனுக்கு இலட்சியம் இல்லை. அவனது தந்தையின் கல்லறை பற்றியும் குழந்தைகளின் பிறப்புரிமை பற்றியும் அவனுக்குச் சிந்தனையே கிடையாது. அவனது பசி இந்த நிலம் அனைத்தையும் விழுங்கி விட்டு வெறும் பாலைவனத்தை மட்டுமே விட்டுச் செல்லப்போகிறது.

உங்களது நகரங்களைப் பார்த்தாலே செவ்விந்தியர்களாகிய எங்களுக்குக் கண்களில் எரிச்சல் உண்டாகிறது. ஒருகால் செவ்விந்தியர்கள் காட்டுமிராண்டிகளாக இருப்பதாலோ அவர்களுக்கு புரியவில்லையோ என்னவோ? வெள்ளையனின் நகரங்களில் அமைதியான இடங்களே கிடையாது. இலைகள் காற்றில் அசைவதனால் ஏற்படும் ஒலியும், வண்டுகள் பறப்பதால் அவற்றின் சிறகுகள் எழுப்பும் ஒலியும் அங்கு கேட்பதில்லை.

நான் ஒரு காட்டுமிராண்டியாக இருப்பதாலோ என்னவோ! நகரங்களின் இரைச்சல் என் காதுகளுக்கு நாராசமாக ஒலிக்கிறது. குயில்களின் கூவுதலையும், தவளைகளின் உரையாடல்களையும் கேட்கமுடியாத இடத்தில் என்னதான் இருக்கிறது? தாமரைக் குளத்தின் மீது தவழ்ந்து வந்து முகத்தில் வீசும் தென்றலும், மழைக்குப் பின் மண்வாசனையுடன் வரும் காற்றும் வேப்பம் பூ மணத்துடன் வரும் காற்றும் எங்களுக்குப் பிடித்தமானவை. இந்தக் காற்று செவ்விந்தியனுக்கு விலை மதிப்பிடமுடியாத பொக்கிஷம். இந்தக் காற்றைத் தான் விலங்குகளும், செடி கொடிகளும், மனிதர்களும் சுவாசிக்கிறார்கள். வெள்ளையன் தான் சுவாசிக்கும் காற்றின் மீது கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. உறுப்புக்கள் செயல் இழந்து சாகப்போகும் மனிதனைப்போல இருப்பதால் அவனுக்கு காற்றின் மணம் தெரிவதில்லை.

உங்களது விருப்பத்தை நான் ஏற்றுக்கொள்ளத் தீர்மானித்தால் அதற்கு ஒரு நிபந்தனை விதிப்பேன். வெள்ளையன் இந்த மண்ணின் விலங்குகளை தனது சகோதரர்களாக எண்ண வேண்டும்.

நான் ஒரு காட்டுமிராண்டி. வேறு எந்த மர்மமும் புலப்பட வில்லை. ஓடும் ரயிலில் இருந்தபடியே வெள்ளையர்கள் சுட்டுத் தள்ளிய ஆயிரக்கணக்கான எருமைகளின் அழுகிய பிணங்களை நான் புல்வெளிகளில் பார்த்தேன். நாங்கள் உயிர் வாழ்வதற்காக எருமைகளைக் கொல்கிறோம். ஆனால் துப்பாக்கி எந்த விதத்தில் எருமையை விட மேலானது என்று எங்களுக்கு விளங்கவில்லை. விலங்குகள் இல்லாமல் மனிதன் எப்படி வாழ முடியும்? எல்லா விலங்குகளும் கொல்லப்பட்டு விட்டால் அவனது ஆத்மாவின் தனிமையே அவனைக் கொன்று விடும். விலங்குகளுக்கு நேர்வது மனிதனுக்கும் நேரும். எல்லா விடயங்களுமே ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. நிலத்துக்கு நேர்வது நிலத்தின் மைந்தர் களுக்கும் நேரும்.

எங்களது குழந்தைகள் தங்களது தந்தையர்கள் போரில் தோற்கடிக்கப்பட்டதைப் பார்த்திருக்கிறார்கள். எங்களது வீரர்கள் அவமானப்பட்டிருக்கிறார்கள். தோல்விக்குப் பிறகு அவர்கள் சோம்பேறிகளாக மாறி நிலத்தை தனது வியர்வை, உணவு, நீர் போன்ற அசுத்தங்களால் மாசுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். எங்களது எஞ்சியுள்ள நாட்களை நாங்கள் எங்கே கழிக்கிறோம் என்பது முக்கியம் அல்ல. சில நாட்களே எஞ்சியுள்ளன. சில மணி நேரங்கள் - சில கல்லறைகளைப் பார்த்துக் கண்ணீர் வடிக்க யாருமே இருக்கமாட்டார்கள். நாங்களும் உங்களைப் போலவே பலம் வாய்ந்தவர்களாகவும் நம்பிக்கை உள்ளவர்களாகவும் இருந்தவர்கள் தான்.

ஒரு விடயம் எங்களுக்கு நன்றாகவே தெரியும். அதை வெள்ளை மனிதனும் விரைவில் தெரிந்து கொள்வான். நம் இருவரின் கடவுளும் ஒருவரே. இப்போது நீ இந்த நிலத்தை உனக்குச் சொந்தமாக்கி கொண்டது போல கடவுளையும் உனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளலாம் என்று எண்ணுகிறாய். அது உன்னால் முடியாது. ஆண்டவன் எல்லா மனிதர்களுக்கும் பொதுவானவன். இந்தப் பூமி அவனுக்குப் புனிதமானது. இந்தப் பூமிக்குக் கெடுதல் விளைவிப்பது கடவுளையே அவமானப்படுத்துவது போலாகலாம். வெள்ளை யர்களும் சீக்கிரமே அழிந்து போவார்கள் - மற்ற இனத்த வர்க்குச் சற்று முன்பாகவே உன் படுக்கையை நீ அசுத்தப்படுத்திக் கொண்டே வந்தால் ஒருநாள் உனது அசுத்தத்திலேயே நீ அழிந்து

போவாய். எல்லா எருமைகளும் கொல்லப்பட்ட பின்பு, எல்லாக் குதிரைகளும் அழிந்த பின்பு காடுகளின் புனிதமான மூலைகளில் மனிதனின் வியர்வை நாற்றம் எஞ்சி இருக்கும். புதர்கள் அழிந்து போகும். கழுகுகள் காணாமல் போய்விடும். சிட்டுக்குருவிகளுக்கும் மைனாக்களுக்கும் விடை கொடுத்து அனுப்புவது எங்கே போய் முடியும்? நமது வாழ்வு முடிந்து சாவு ஆரம்பத்தில் தான் முடியும்.

வெள்ளை மனிதன் எந்த மாதிரி கனவு காண்கிறான் என எங்களுக்குத் தெரியவில்லை. அது தெரிந்தால் எங்களால் வெள்ளையர்களைப் புரிந்து கொள்ள முடியும். தனது குழந்தைகளின் மனதில் எந்த நம்பிக்கைகளை அவன் வளர்க்கிறான். எந்த மாதிரி வருங் காலம் அவர்களுக்கு அமைய வேண்டும் என்று அவன் நினைக்கிறான் என்பதெல்லாம் எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் நாங்கள் காட்டுமிராண்டிகள். வெள்ளையனின் கனவு பற்றி எங்களுக்கு எதுவுமே தெரியாது. எங்களுக்கு அது தெரியாததால் எங்கள் பாதையிலே நாங்கள் போவோம். நமக்குள் உடன்பாடு ஏற்பட்டால் அது நீங்கள் எங்களுக்காக ஒதுக்கி இருக்கும் நிலங்களைப் பெறுவதற்குத்தான். அந்த நிலங்களில் எங்கள் விருப்பம் போல் சில காலம் நாங்கள் வாழ்வோம். கடைசி செவ்விந்தியன் மறைந்த பின் எங்களது ஆவிகள் இந்தப் புல் வெளிகளில் உலாவி வரும். உலகில் சிறந்த குழந்தை தனது தாயை நேசிப்பது போல் நாங்களும் இந்தப் பூமித்தாயை நேசிக்கிறோம்.

எங்களது நிலத்தை நீங்கள் வாங்கிவிட்டால் அதை எங்களைப் போல் நீங்களும் நேசியுங்கள். எங்களைப் போலவே அதைப் பாதுகாத்து வாருங்கள். நிலத்தை உங்கள் அனைத்துச் சக்தியையும் திரட்டி நினைவில் கொள்ளுங்கள். உங்களது குழந்தைக்காக அதைப் பாதுகாத்து வாருங்கள். கடவுள் நம் அனைவரையும் நேசிப்பதைப் போலவே நீங்களும் நிலத்தை நேசியுங்கள். எங்களுக்கு நன்றாகவே தெரியும் கடவுள் நமக்குப் பொதுவானவர் என்று. இந்தப் பூமி அவருக்குப் பெருமதிப்பிற்குரிய பொருளாகும். நமக்குப் பொதுவான தலைவிதியிலிருந்து வெள்ளையன் கூடத் தப்பிக்க முடியாது.

**இப்படிக்கு**
**சீத்தல்**
**செவ்விந்தியத்தலைவர் - 1855**

"வன நாடே வளநாடு
அது நிலைக்க வழிகோலு"

